[7th August 1965]

சிறிய அணைக்கட்டு கட்டினுல், வைகையிலிருந்து வருகிற தண்ணீர் நின்றுபோய்விடும். பெரியாற்றிலிருந்து வருகிற தண்ணீரை கிழக்கு இராமநாதபுரம் பகுதிக்கு திறந்துவிடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : வைகை அணை கட்டியதற்குப் பிறகு கிழக்கு இராமநாதபுரம் பகுதிக்கு போதுமான தண்ணீர் கிடைத்துக்கொண்டிருக்கிறது. இதற்கு முன்பிருந்த நிலையைவிட இப்பொழுது சுமுகமான நிலை இருக்கிறது. இன்னும் அதிகமாக கொடுக்கவேண்டும் என்பதில் யாருக்கும் ஆட்சேபணை கிடையாது ஆனுல், கனம் அங்கத்தினர் குறிப்பிட்டதுபோல் வைகை அணைக்கு மேல் சிறு அணைகள் கட்டினுல் இவர்களுக்கு போகவேண்டிய தண்ணீர் பாதிக்கப்படாது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

Drought in Pudukkottai Division

* 114 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether it is a fact that the villages in Pudukkottai Division of Tiruchirappalli District have been affected by drought;

(*b*) if so, the number of villages and the extent of lands so affected; and

(*c*) the nature of assistance proposed to be rendered to the affected in this regard?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) Twenty-six thousand nine hundred and twenty-one acres in 144 villages.

(*c*) The Board of Revenue has instructed the Collector of Tiruchirappalli to take steps to grant seasonal remission under B.S.O. 13 for all eligible cases. The Government have approved the Board's action.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நிலவரியிலிருந்து ரெமிஷன் கொடுத்தால் மட்டும் போதாது. கடன் வசூலிப்பதையும் ஒரு ஆண்டுக்கு ஒத்தி வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH : It has also been decided to postpone it.

மரக்காணத்திலிருந்து வேலூருக்குப் புதிய ரயில் பாதை

*** 115 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனம் வட்டத்திலுள்ள மரக்காணத்திலிருந்து திண்டிவனம், வந்தவாசி, வழியாக வேலூருக்கு செல்ல புதிய இரயில்பாதை அமைக்குமாறு மாநில அரசு மத்திய அரசுக்கு சிபாரிசு செய்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?